# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

## 03.01.2016 – மாநில செயற்குழு கூட்ட தீர்மானங்கள்

**தீர்மானம்–1**

கடும் மழை வெள்ளத்தால் உயிர் நீத்தவர்களின் ஆன்மா சாந்தி அடையவும், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு துன்பங்களுக்கு உள்ளானவர்கள் விரைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிடவும் சங்கம் பிரார்த்திக்கின்றது.

**தீர்மானம் எண்.2**

வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை உடனடியாக அமல்படுத்திட 16.03.2015 மற்றும் 19.03.2015 ஆகிய தேதிகளில் ஒப்புக்கொண்டபடி விரைந்து அமல்படுத்தாமல் 9 மாதங்களுக்கும்மேலாக தாமதப்படுத்தி வருவதால் பட்டயப் பொறியாளர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும் வருகின்றனர். எனவே வாரியமும், அரசும் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை உடனடியாக அமல்படுத்திட,

- 02.02.2016 அன்று தமிழகம் முழுவதும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பாக நுழைவாயிற் கூட்டங்கள் நடத்திடவும்
- கோரிக்கைகள் அமல்படுத்திட மேலும் தாமதமானால், மாநிலப் பொதுக்குழு முடிவின்படி வருகின்ற மார்ச் மாதத்தில் சென்னையில் தமிழகம் தழுவிய "உண்ணாவிரதப் போராட்டம்" நடத்திடவும் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.3**

பணியமைப்பு நிர்வாகத்தால் தாமதப்படுத்தப்பட்டுவரும்

- உதவிப் பொறியாளர் உள்முகத்தேர்வு பட்டியலை அனுமதித்து பணி நியமன உத்தரவுகளை உடனடியாக வழங்கிடவும்
- இளநிலைப் பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுக்கு வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற தடையை நீக்கி உடனடியாக பதவி உயர்வு வழங்கிடவும்
- உதவிப் பொறியாளர் மின்னியல் முன்னுரிமை பட்டியலுக்கான நீதிமன்ற தடையை நீக்கி உதவிப் பொறியாளர் முன்னுரிமையையும், உதவி செயற் பொறியாளர் பதவி உயர்விற்கான நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டிடவும்
- இயந்திரவியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை மற்றும் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வுகள் உடனே வழங்கிடவும்
- உதவி செயற் பொறியளர் இயந்திரவியல் பதவி உயர்வுகள் உடனடியாக வழங்கிடவும்
- உள்முகத்தேர்வு / தொழில்நுட்ப உதவியாளர்கள் (மின்னியல், இயந்திரவியல்) பட்டியல் அனுமதித்து பணிநியமன உத்தரவுகள் வழங்கிடவும்

வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம்–4**

சென்னை இராயப்பேட்டை சங்க அலுவலகத்தை புதிதாக கட்டுவதற்கு கிளைகளிலிருந்து பெறப்பட வேண்டிய கட்டிட நன்கொடையை பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொண்டு அறிவித்தபடி 2016 ஜனவரி முதல் மார்ச் மாதத்திற்குள் (3 மாதங்களுக்குள்) நிலுவையின்றி செலுத்திட அனைத்து கிளைச் செயலாளர்கள் மற்றும் மையப் பொறுப்பாளர்களும் ஏகமனதாக தீர்மானிக்கின்றனர். இதனை கவனித்து வசூல் செய்திட செயலாளர் / நிர்வாகம் மற்றும் செயலாளர் / தலைமை நிலையம் ஆகியோருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்படுகிறது.

**தீர்மானம்–5**

சென்னை இராயப்பேட்டையில் புதிய கட்டிடம் உருவாக்கிட மாநிலத்தலைவர் பொர்.அந்தோனி படோவராஜ் அவர்கள் தலைமையில் கீழ்காணும் உறுப்பினர்களை கொண்ட கமிட்டியை உருவாக்கி கட்டிடப்பணிகள் சிறப்பாகவும் செம்மையாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்திட இக்கூட்டம் ஏகமனதாக அனுமதி அளிக்கின்றது.

கட்டிட குழு

| | |
|---|---|
| 1. பொர்.A.அந்தோனி படோவராஜ் | மாநிலத் தலைவர் |
| 2. பொர்.V.அசோக்குமார் | பொதுச் செயலாளர் |
| 3. பொர்.R,பத்ரிநாராயணன் | பொதுப் பொருளாளர் |
| 4. பொர்.G,முரளிகிருஷ்ணன் | அமைப்புச் செயலாளர் |
| 5. பொர்.S.கண்ணன் | முன்னாள் பொறுப்பாளர் |
| 6. பொர்.S.இராஜகோபால் | முன்னாள் பொறுப்பாளர் |
| 7. பொர்.W.கலைரஞ்சன் | முன்னாள் பொறுப்பாளர் |
| 8. பொர்.P.பால்பாண்டி | Br.Secy/திண்டுக்கல் கிளை |
| 9. பொர்.V.அசோக்குமார் | GCM/திருவண்ணாமலை கிளை |
| 10.பொர்.R.அழகுசபை | GCM/மேட்டூர் கிளை |
| 11.பொர்.S.வெங்கடேசன் | உறுப்பினர் (AEE/Civil) |

**தீர்மானம்–6**

மழையால் பாதிக்கப்பட்ட கடலூர் மக்களின் துயர்நீக்கிட பொறியாளர் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட உதவிக்கான ரூ.7,01,310/– அனுமதித்திடவும் சங்கத்தோடு இணைந்து உதவி செய்திட்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்திடவும் தீர்மானிக்கப்பட்டது.

6-1-16

வி.அசோக்குமார்.
பொதுச் செயலாளர்.